DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 121 /2024**

Deposition of Witness: PW1.

| | | | |
|---|---|---|---|
| Name | ஜம்புலிங்கம் | Father Name –மகாலிங்கம் | |
| Age | 42 | Village – | போடிநாயக்கனூர் |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.04.2026.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**.

1. வழக்குரை சொத்து எனது தந்தை மகாலிங்கத்திற்கு பாத்தியப்பட்டு எனது தந்தை 1ம் பிரதிவாதி சுப்பிரமணியனுக்கு ஈடு எழுதி கொடுத்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி ஈடு பத்திரத்திற்கு எனது தந்தை 1ம் பிரதிவாதிக்கு வட்டி செலுத்தியதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, நான் வெளியூரில் இருந்ததால் எனக்கு அதை பற்றி தெரியாது. எனது தந்தை எந்த வருடம் இறந்தார் என்றால் 2020ம் வருடம் இறந்தார். 1ம் பிரதிவாதி எனது தந்தை மீது ஈடு பத்திரத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்து அது 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்ப்பான விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தற்போது 1ம் பிரதிவாதிக்கு அசல் மற்றும் வட்டி தொகையை இந்நீதிமன்றத்தில் செலுத்த தயாராக உள்ளேனா என்றால் நான் தயாராக இல்லை, எனது தந்தை அதை முழுவதுமாக கொடுத்துவிட்டதாக என்னிடம் சொன்னார். எனது தந்தை 1ம் பிரதிவாதிக்கு வட்டியும் அசலும் செலுத்தவில்லை என்றும், வாரிசு என்ற அடிப்படையில் எனது தந்தை செலுத்த வேண்டிய அசலையும் வட்டியையும் செலுத்துவதற்கு நான் கடமைபட்டவர் என்றால் சரியல்ல. வழக்கின் பிரச்சனை சம்மந்தமாக ஜாதி சங்கத்தில் வைத்து பேசியபோது எவ்வளவு ரூபாய் தருவதாக நான் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் ரூ.11,500 தருவதாக நான் ஒப்புக்கொண்டுள்ளேன். நான் ஜாதி சங்கத்தில் எப்போது பேசினேன் என்றால் எனது தந்தை இறந்த ஒரு வருடத்தில் இருந்து வழக்கு தாக்கல் செய்யும் வரை அங்கு வைத்து பேசி பார்த்தேன். நான் 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு என்ன காரணம் சொல்லி திருப்பி அனுப்பப்பட்டது என்றால் வாங்க மறுத்துவிட்டார் என்று திரும்ப அனுப்பப்பட்டது. நான்

சொல்வது போல் 1ம் பிரதிவாதி வாங்க மறுக்கவில்லை என்றும், அந்த சட்ட அறிவிப்பு அனுப்பியபோது 1ம் பிரதிவாதி ஊரில் இல்லை என்றும், நான் 04.10.2024ம் தேதிய அறிவிப்பு 05.10.2024ம் தேதியே திரும்ப வந்துவிட்டது என்றால் சரியல்ல. நான் காலவரையறை சட்டத்தின்படி ஈடு கடன் பத்திரம் காலாவதியாகிவிட்டது என்று சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. ஈடு கடன் பத்திரம் குறித்தும் அதன் அடிப்படையில் நான் செலுத்த வேண்டிய அசல் தொகை மற்றும் வட்டி தொகை சம்மந்தமாக தற்போது வரை பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதால் ஈடு கடன் ஆவணம் காலாவதியாகிவிட்டது என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. எனது தந்தையின் இறப்பு சான்றிதழை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தையின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனதுதந்தையின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் அடிப்படையில் நானும் மற்ற வாதிகளும் 1ம் பிரதிவாதிக்கு செலுத்த வேண்டிய கடன் மற்றும் வட்டி தொகையை செலுத்த கடமைபட்டவர்கள் என்றால் சரியல்ல. எனது தந்தை 1ம் பிரதிவாதியிடம் உண்மையில் ரூ.1,30,000 கடன் பெற்றார் என்றும், முத்திரை கட்டணத்தை குறைப்பதற்காகவும், எனது தந்தை 1ம் பிரதிவாதியின் உறவினர் என்பதாலும் பொறுப்பிற்காக ரூ.11,500 என ஈடு பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, எனது தந்தை ரூ.11,500 தான் வாங்கினார். 1ம் பிரதிவாதி ஜாதி சங்கத்தில் கொடுத்த மனுவின் பேரில் நடைபெற்ற விசாரணையில் எனது தந்தை ரூ.1,30,000மும் அதன் வட்டியும் தருவதாக ஒப்புக்கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. ஜாதி சங்கத்தில் வைத்து பேசியபோது வழக்குரை சொத்தை ரூ.3,00,000க்கு 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுப்பதாக எனது தந்தை ஒப்புக்கொண்டு 1ம் பிரதிவாதியிடம் இருந்து மேலும் ரூ.50,000 ஜாதியார் முன்னிலையில் பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. ரூ.3,00,000க்கு கிரையம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு ரூ.50,000 பெற்றது எனக்கும் மற்ற வாதிகளுக்கும் நன்கு தெரியும் என்றும், தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எனது தந்தை இறந்த பின்பு கிரையத் தொகை ரூ.3,00,000 பத்தாது என்றும், கூடுதலாக ரூ.1,00,000 வேண்டும் என நாங்கள் கேட்டோம் என்றும், அதன் அடிப்படையில் ஜாதியார் முன்னிலையில் வாய்மொழியாக ஒப்பந்தம் போட்டுக்கொண்டோம் என்றால் சரியல்ல. எனது தந்தை உயிருடன் இருக்கும்போது

ரூ.1,30,000 கடனாக வாங்கினார் என்றும், அதன் பின்பு ரூ.50,000 கிரைய முன்பணமாக வாங்கினார் என்றும், நாங்கள் ரூ.1,50,000 ஜாதியார் முன்னிலையில் வாங்கினோம் என்றும், ஆக மொத்தம் ரூ.3,30,000 த்தை 1ம் பிரதிவாதியிடம் இருந்து வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. எனது தந்தை உயிருடன் இருக்கும்போதே அசல் மற்றும் வட்டியை செலுத்தியிருந்தால் அப்போதே ஈடு கடன் பத்திரம் ரத்து செய்யப்பட்டிருக்கும் என்றும், அவ்வாறு செலுத்தாததால்தான் ஈடு கடன் பத்திரம் ரத்து செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனது தந்தையிடம் அசல் மற்றும் வட்டி தொகையை பெற்றுக்கொண்டு ஈடு கடன் பத்திரத்தை ரத்து செய்து தர மறுக்கிறார் என்று வழக்கறிஞர் அறிவிப்போ, காவல் நிலையத்தில் புகாரோ அல்லது நீதிமன்றத்தில் வழக்கோ எனது தந்தை தாக்கல் செய்தாரா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது தந்தையின் வாரிசுகள் என்ற அடிப்படையில் நானும் மற்ற வாதிகளும் நாங்கள் பெற்ற ரூ.3,30,000 த்தையும் வட்டியையும் செலுத்த கடமைபட்டவர்கள் என்றும், அதனால் நாங்கள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.04.17 01:21:45 +0530

District Munsif,
Bodinayakanur.